**மாண்புமிகு ஜிம் கரிஜியானிஸ்**

**நகரக் கவுன்சிலர் வார்ட்டு 39 ஸ்காபுரோ – அஜின்கோர்ட்.**
**மாண்புமிகு ஜிம் கரிஜியானிஸ் ரொறன்ரோ நகர சபையில் அக்டோபர் 27 2014 தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

மேலும் திரு கரிஜியானிஸ் பின்வருவனவற்றுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்

- துணைத் தலைவர் உரிமம் மற்றும் நியமங்கள் குழு
- ஸ்காபுரோ சமூகக் கவுன்சில் மற்றும்
- நீதி மன்றங்கள் வேட்புக் குழு.

மேலும் அவர் அமர்ந்திருப்பது

- கனடிய தேசியக் கண்காட்சிச் சங்கம் மாநகர பகுதி,
- கவர்னர்கள், மற்றும் நகரபிதாவால் நியமிக்கப்பட்ட கண்காட்சி இட வாரியம்,
- இயக்குநர்கள் வாரியம் ஹார்பர்பிரண்ட் (Harbourfront) மையம்
- ஒன்ராறியோ சங்கத்தின் நகராட்சிகளின் பிரெஞ்சுச் சங்கம்.
- ஸ்காபுரோ சமூக பாதுகாப்புக்குழு மற்றும்
- ஸ்காபுரோ மருத்துவமனை சமூக ஆலோசனைக் குழு.

திரு கரிஜியானிஸ் ஸ்காபுரோ – அஜின்கோர்ட்ற்கான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். பரந்த அரசியல் அனுபவமும் நிரூபிக்கப்பட்ட சாதனையும் பொதுச்சேவையும் கொண்ட அவர் மக்களுக்கு ஒரு பயனுள்ள குரலாவார்.

அவர் படைவீரர்களின் விவகாரங்களின் லிபரல் கட்சியின் விமர்சகராவார். மேலும் பல்கலாச்சாரத்துக்கான விமர்சகரும் பங்குதாரர்களுக்கும், சமூகத்தின் நலனுக்கும் பொறுப்புடையராவருமாவார்.

மேலும் அவர் மனிதவள மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளராகப் பணியாற்றியவர்.

இந்தப் பதவிக்கு முன்பு அவர் போக்குவரத்து அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளராகப் பணியாற்றினார். அவருடைய சிறப்பு முக்கியத்துவம் போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழலில் இருந்தது. அவருடைய பதவிக்காலத்தில், நகராட்சி, மாவட்ட மற்றும் கூட்டாட்சி அளவில் உள்ள தனது சக அரச தொழிலாள உறவுகளிடம் திரு கரிஜியானிஸ் நல்ல பிணைப்பான உறவை வைத்திருந்தார்.

அவர்களுடன் ஒன்றாக இணைந்து சமூகத்தின் மிக முக்கியமான பிரச்சினைகளில் பணியாற்றினார். அவையாவன: சட்ட அமுலாக்கல் முகவர் நிறுவனங்கள் மற்றும் பல்வேறுபட்ட

அரசாங்கத் நிறுவனங்களுடன் பணியாற்றுதல் மரிஜுவானா வளர் வீடுகளைச் சமாளிக்க வேண்டி செயற்குழு அமைத்தல் என்பன அடங்கும்.

மற்றும சக பணியாளர்களுடன் இணைந்து சமுதாயப் பாதுகாப்பை வலுப்படுத்தியதுடன் ஸ்காபரோ – அஜின்கோர்ட்டில் தற்காலிக வீடுகளில் வசிப்பவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தார்

சார்ஸ் தொற்று நோய் ரொறன்ரோவையும் கனடாவையும் தாக்கியபோது கிரேஸ் மருத்துவமனையே நிகழ்வு மையமாக இருந்தது. ஜிம் அவரது ஒட்டாவா சக வேலையாட்களுடன் கூடி பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மற்றும் முன்னிலையில் நின்று வேலை செய்த மக்களின் சம்பளப் பிரச்சினைக்கும், ஊழியர் காப்புறுதி மூலம் நம்பகமான தீர்வு கண்டார்.

ஜிம், போக்குவரத்து அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர் என்ற முறையில் ரொறன்ரோ நகர அதிகாரிகளுடனும் வார்ட் 39 ஸ்காபரோ – அஜின்கோர்ட் மக்களுடனும் மற்றும் கோ பிரான்சிட் (Go Transit) போக்குவரத்துடனும் வேலை செய்து தெற்கு நோக்கிப் பயணம் செய்யும் இரயில் விசில் ஒலி உரத்து எழுவதற்கு வழிவகை செய்தார். வார்ட் 39, கிழக்கு எல்லை, ஸ்காபரோ – அஜின்கோர்ட் பகுதிகளில் வசிப்பவர்களை இது தொந்தரவு செய்யவில்லை.

ஜிம் வார்ட் 39 ஸ்காபரோ – அஜின்கோர்ட்டின் குடியிருப்பாளர், இது ரொறன்ரோ நகரத்தில் மிக அதிகமாக பல்வேறு இனத்தவர் வாழும் சுற்றுப்புறம்.

இவர் பல இனத்திலுமுள்ள கனடாவுக்கு புலம் பெயர்ந்தவர்களுடன் வேலை செய்துள்ளார். மேலும் தொடர்ந்து, பல கலாச்சார சமூகங்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தேசத்தைக் கட்டியெளுப்பும் பொருளாதாரப் பேண்தகைமை மற்றும் சமூக நீதிப் பிரச்சனைகளையும் கையாள்வார். மேலும் அவர் கனடாவுக்கு புலம் பெயர்ந்தவர்களுடனும் கனடா அரசுடனும் இணைந்து இயற்கை மற்றும் மனிதனால் ஏற்பட்ட பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவி சேகரிக்கும் பணியிலும் ஈடுபட்டார்.

சமுதாயங்கள் பலதிடமிருந்தும் அவரது பணி அங்கீகாரம் பெற்றுள்ளது. விருதுகள் உட்பட பல பாராட்டுக்கள் ஜிம்முக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆர்மீனியா இனப்படுகொலை உலக அங்கீகாரம் பெற அவரது உள்ளீடு, கணிசமான பங்களிப்புக்காக ஆர்மீனிய குடியரசு அரசாங்கத்திலிருந்து 'அமையப் பதக்கம்' கிடைத்தது.

'கரபாக் இயக்கம் தங்கப்பதக்கம் 25 ஆண்டு' அரசு நகோர்னோ கரபாக் குடியரசை விஜயம் செய்த முதலாவது கனடியன். நகோர்னோ கரபாக் குடியரசை 2012 ஜனாதிபதித் தேர்தலில் கண்காணிப்பு மற்றும் பீனிக்ஸ் அலுவல் அதிகாரி, மற்றும் கோல்ட் அலங்காரம், ஹெலனிக் குடியரசு அங்கீகாரம் போன்ற பல பொது சேவைகள்.

ஜிம் 1955 ல் எதென்ஸ் கிரீசில் பிறந்தார். 1966ல் குடும்பத்தாருடன் கனடாவில் குடியேறினார். ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தொழில்துறை பொறியியல் பிரயோக இளங்கலை அறிவியல் பட்டத்தை 1978 ல் பெற்றார். அவரிடம் கனடிய பள்ளி வணிக நிர்வாகமும் வணிக மேலாண்மை பெலோஷிப்பும் உள்ளது. இவர் பாராளுமன்ற உறுப்பினராகத் 1988 ல் தேர்ந்தெடுக்கப்பட்ட போது குடும்ப வணிகத்தில் வேலைசெய்து கொண்டிருந்தார்.